மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னால் இருந்த வழக்கத்தை நான் மாற்றியிருக்கிறேன். சரியாக 10.00 மணிக்கு கேள்வி நேரத்தை முடித்துவிட்டு, மீதி கேள்விகள் இருந்தால் அதற்கான பதிலை அவைக் குறிப்பில் அச்சிட்டுக் கொள்ளும் முறையை இப்போது கையாண்டு வருகிறேன். கடந்த சில நாட்களாக அப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கியமான கேள்வி என்று நீங்கள் கருதி, என்னுடைய கவனத்தை உரிய நேரத்தில் ஈர்த்திருந்தால் நிச்சயமாக அனுமதி தந்திருப்பேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, கடைசியாக நடந்த அலுவல் ஆய்வுக் குழுவில்கூட 10.00 மணிக்கு கேள்வி நேரத்தை முடித்து விடுவேன் என்று சொன்னீர்கள். அப்போது நாங்கள் முக்கியமான கேள்விகளாக இருந்தால் ஏற்கனவே உள்ள வழக்கத்தை கையாளலாம் என்று சொன்னோம். ஏற்கெனவே இருக்கிற வழக்கத்தின்படி 10 அல்லது 15 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுக்கலாம் என்று ஆலோசனை சொன்னோம். தாங்களும் அதைப் பரிசீலிக்கலாம் என்று சொன்னீர்கள். ஆகவே, அந்த வகையில் தங்களுடைய தீர்ப்பை சற்றுத் தளர்த்தி, வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : என்னைப்போன்ற புதிய அங்கத்தினர்களுக்கு துணைக் கேள்விகள் கேட்கத் போதுமான வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். என்னுடைய கவனத்தை சரியான முறையில் ஈர்த்திருந்தால் துணைக் கேள்விக்கு வாய்ப்பு அளித்திருப்பேன். இனிமேல் ஏற்கெனவே இருந்த வழக்கத்தின்படி, தேவைப்பட்டால் 5 அல்லது 10 நிமிடங்கள் நீட்டித்துக் கொள்கிறேன். இப்போது வேறு நிகழ்ச்சிக்கு வந்துவிட்டதால் நாளையிலிருந்து அந்த முறையைக் கடைப்பிடிக்கிறேன்.

(ஆ) விவசாயிகளுக்கு மின்—இணைப்புத் துண்டிப்பு குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் மின் துண்டிப்பை எதிர்த்து நாங்கள் எல்லாம் எங்கள் கட்சியின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், காங்கிரஸ் கட்சியினரும் வெளிநடப்பு செய்தோம். இப்போது சேலம் மாவட்டத்தில் மறுபடியும் மின் துண்டிப்பை எதிர்த்து, பலர் கைதாகி இருக்கிறார்கள். ஆர்பாட்டங்கள், கிளர்ச்சிகள் அங்கே தொடர்ந்து நடைபெறுகின்றன. அரசு சலுகை அறிவித்து இருக்கிறது, 3 வருஷ தவணைகளை 3 வருஷங்களில் கட்டலமே என்று அறிவித்தும், இந்த அறிவிப்பு வருவதற்கு முன்னால

1979 மார்ச் 13] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

பல்வேறு இடங்களிலே மின் துண்டிப்பு நடைபெற்று வருகிறது. இது அரசுக்குத் தெரியாதா? அரசாங்கம் சொன்ன உடனே கட்டவேண்டும் என்று சொல்லி இப்படி மின்சாரத்தைத் துண்டித்துவிட்டார்கள். மேலும் துண்டித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நாங்கள் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தினேன். உயர்மட்டக்குழு வேறு நடந்துகொண்டிருக்கிறது. அது பத்து, பதினைந்து, நாட்களிலே முடிந்துவிடும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் இவ்வாறு அறிவித்த காரணத்தால் அறிவிக்கப்பட்ட சலுகைகளின்படி கட்டுவதற்குக் கூட நேரம் இல்லாத அளவில் இருக்கின்றபோது மின்சாரத்தைத் துண்டித்ததால் மேலும் பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மிகப் பதட்டமான இந்தச் சூழ்நிலை குறித்து விவாதிப்பதற்கு நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதை இன்றைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கே இந்தப் பிரச்சினை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு, அதை எடுத்துக் கொள்ளாத நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் வெளிநடப்பு செய்தனர். அதைத் தொடர்ந்து மற்றவர்களும் வெளிநடப்பு செய்தனர். 'அதை இன்று எடுத்துக்கொள்ள முடியாது, நாளை எடுத்துக்கொள்ளலாம்', என்று நான் சொல்லியும் நீங்கள் வெளி நடப்பு செய்தீர்கள். ஆகவே இன்றைக்கு இதனை எடுத்துக் கொள்ள இயலாது. வேண்டுமானால் அமைச்சரவர்கள் பதில் சொல்லத் தயாராக இருந்தால் சொல்லட்டும்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, நேற்றைக்கு இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்கப் பட்டபோது மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்கள் தான் இதனை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார்கள். தாங்களும் அவ்வாறுதான் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் நான் இதுபற்றிச் சொன்னபோது, அதாவது நேரம் இல்லாத காரணத்தால் இதனை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னதற்கு திரு அழகர்சாமி அவர்கள் அதனை இன்றைக்கே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி அதைப்பற்றிய விளக்கத்தையும் தந்துவிட்டு வெளி நடப்பு செய்தார்கள். மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் அப்போது வெளி நடப்பு செய்தார்கள். ஆகவே அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படாத நிலையில் நாங்கள் வெளி நடப்புச் செய்யவில்லை. அதுபற்றிப் பேசப்படும்போ

நாங்கள் இங்கே இருந்தோம். ஆகவே டெக்னிகலாகப் பார்த்தால் கூட எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் தனது தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தாங்கள் அறிவித்ததைப் போல இந்தப்பிரச்சினை எழுப்பப்பட்டபோது ஒரு சில எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்திருந்தாலும் அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். இதனை ஒரு முன் உதாரணமாக நம்முடைய சட்டமன்றப் பேரவையில் ஆக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில் இதை எடுத்துக்கொள்ளலாம் என்று தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு முறை தள்ளி விடப்பட்டு விட்டது. ஆகவே வேண்டுமானால் விதி 82-ன் கீழ் அறிக்கை தரலாம். (கூச்சல் குழப்பம்) சரி இன்றைக்கு வைத்துக் கொள்வோம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இதனை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுதான் இன்று எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று சொல்லிவிட்டேனே.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

விவசாயிகளுக்கு மின்—இணைப்புச் சலுகைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9. 3. 79 அன்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகள் பிரச்சினை சம்பந்தமாக அறிவித்தது 8–3–1979 தேதிய சர்வகட்சிக் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூறிய கருத்துக்கு முரணாக உள்ளதால் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பான மற்றும் பதட்ட நிலை பற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டு திரு. சோ. அழகர்சாமி, திரு. மு. அம்பிகாபதி, திரு. பெ. உத்திராபதி, திரு. செ. சிவசாமி, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. என். வரதராஜன், திரு. ரா. கிருஷ்ணன் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. நா. சுந்தரராஜ், திரு. செ. சதாசிவம், திரு. தெ. இரா. இராஜாராம் நாயுடு, திரு. கே. கந்தசாமி, திரு. கெ. சொக்கலிங்கம், திரு. ஆறுமுகம், திரு. ரா. மார்க்கபந்து திரு. ப. சந்திரன், திரு. பெ. சு. திருவேங்கடம்,